# வெளிப்பாடு என்கின்ற உபதேசம்

## 1. வெளிப்பாட்டின் அவசியம்

6000 வருடங்களாக மனிதன் பார்த்து வியந்து கொண்டிருக்கிற இந்த அகிலத்தை தேவன் ஆறு நாட்களுக்குள்ளே சிருஷ்டித்திருக்கிறார். அவருடைய சிருஷ்டிப்புகள் அனைத்தும் அவரை மகிமைப்படுத்தும்படியாக சிருஷ்டிக்கப்பட்டது. வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது (சங் 19:1). அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது (கொலோ 1:16). இவை அனைத்தையும் ஆறு நாட்களுக்குள் உருவாக்கின தேவன் சர்வ ஞானி, சர்வ வியாபி, சர்வ வல்லவர் என்பதை இந்த சிருஷ்டிப்புகள் வெளிப்படுத்துகின்றன.

ஆனால் தேவனுடைய மற்ற குணாதிசயங்களாகிய நீதி, பரிசுத்தம், அன்பு, கிருபை, இரக்கம், சத்தியம் இவைகளையெல்லாம் மனிதன்தான் வெளிப்படுத்த முடியும். அதற்காகவே மனிதன் உருவாக்கப்பட்டான். நான் என் மகிமைக்கென்று சிருஷ்டித்து உருவாக்கிப் படைத்து, என் நாமந்தரிக்கப்பட்ட யாவரையும் கொண்டுவா என்பேன் (ஏசாயா 43:7). ஒரு சிற்பியானவனின் சிலையை பார்க்கும்பொழுது அவனுடைய உள்ளுணர்வுகள் அதை வெளிப்படுத்துகிறது; அதுபோலவே தேவனை மகிமைப்படுத்தும்படியாகவே மனிதனை படைத்தார்.

மனிதன் தேவனை மகிமைப்படுத்த வேண்டுமென்றால் தேவனைக் குறித்த அறிவு அவனுக்கு வேண்டும். வேதம் சொல்லுகிறது: தேவனை ஒருவனும் ஒருக்காலுங் கண்டதில்லை (யோவான் 1:18; 1யோவான் 4:12; 1 தீமோ 6:16). ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; ...அவைகளை அறியவுமாட்டான் (1 கொரி 2:14). நம்முடைய வழிகளைப் பார்க்கிலும் அவருடைய வழிகளும் நம்முடைய யோசனைகளை பார்க்கிலும் அவருடைய யோசனைகளும் உயர்ந்திருக்கிறது என்று வேதம் சொல்லுகிறது. ஆகவே மனிதன் தானாக தேவனை அறியமுடியாது. மனிதன் தேவனை பார்க்கவும் முடியாது; அறியவும் முடியாது; அப்படியானால் தேவனைப் பற்றிய அறிவை மனிதன் எப்படி பெற்றுக்கொள்ளுகிறான். தேவனே தன்னை மனிதனுக்கு வெளிப்படுத்தினாலொழிய மனிதன் தேவனை அறிந்து கொள்ளமுடியாது. ஆக தேவன் மனிதனுக்கு தன்னை வெளிப்படுத்தினால் மட்டுமே அவன் தேவனை இந்த உலகத்திற்கு வெளிப்படுத்த முடியும்.

ஆனால் மனிதன் தேவனை வெளிப்படுத்தாமல் இருப்பதற்கு பாவம் ஒரு காரணமாய் அமைகிறது. இந்தப் பாவமே மனிதன் தேவனை அறிந்து கொள்வதற்கு ஆர்வம் இல்லாதவனாக இருப்பதை காட்டுகிறது. மனிதனுடைய வீழ்ச்சிக்கு முன்பாக தேவனோடு ஐக்கியப்பட்டுக்கொண்டிருந்த மனிதன் பாவம் செய்த பிற்பாடு ஓடி ஒளித்துக்கொண்டான் என்று வேதம் சொல்லுகிறது. இந்தப் பாவத்தினால் மனிதன் முற்றிலும் செயலிழந்தனாக காணப்பட்டான். அவன் ஆவிக்குரிய விஷயங்களில் மரித்தவனாக காணப்படுகிறான் (எபேசியர் 2:1). பாவியான மனிதனுக்கு ஆவிக்குரிய காரியங்கள் பைத்தியமாய் தோன்றுகிறது

(1 கொரி 2:14). மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை என்றும் வேதத்தில் வாசிக்கிறோம் (ரோமர் 8:7). இந்த மனிதனுடைய பாவமே தேவனை குறித்து அறிவதற்கு விருப்பமில்லாததற்கு காரணமாகும். இந்தப் பாவத்தில் இருக்கிற மனிதனை இரட்சித்து பரலோகத்துக்கு அழைத்துச் செல்லவேண்டும் என்பதற்காகவே தன்னை வெளிப்படுத்தினார்.

2. **வெளிப்பாடு என்ற வார்த்தையின் மூலபாஷையின் சொற்கள்**

எபிரேய பாஷையிலே 'காலா' என்கின்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு 'நீக்குதல்' அல்லது 'வெளிப்படுத்துதல்' என்பது பொருளாகும்.வேதாகமத்தில் இந்த வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிற வசனங்கள் :

- நோவா பேழையின் மேல்தட்டை எடுத்துப்பார்த்தான். இங்கே எடுத்துப்பார்த்தான் என்கின்ற வார்த்தைக்கு 'காலா' என்கின்ற பதமானது பயன்படுத்தப்பட்டிருக்கிறது (ஆதி 8:13).
- அப்பொழுது கர்த்தர் பிலேயாமின் கண்களைத் திறந்தார் (எண் 22:31). இங்கே திறந்தார் என்கின்ற வார்த்தைக்கு 'காலா' என்கின்ற பதமானது பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

கிரேக்க பாஷையிலே 'அப்போகாலிப்சிஸ்' என்ற வார்த்தையானது பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு திரையை நீக்குதல் என்று அர்த்தமாகும்.

- சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. பிதா தவிர வேறொருவனும் குமாரனை அறியான்; குமாரனும், குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனும் தவிர, வேறொருவனும் பிதாவை அறியான் (மத் 11:27). இங்கே 'வெளிப்படுத்த' என்கின்ற வார்த்தைக்கு 'அப்போகாலிப்சிஸ்' என்கின்ற பதமானது பயன்படுத்தப்பட்டிருக்கிறது.
- தமிழில் வெளிப்படுத்தல் என்கின்ற இந்த வார்த்தைக்கு சம்பந்தமான மற்றொரு வார்த்தையாக இரகசியம் என்ற வார்த்தையும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இங்கே பழைய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்படாத சத்தியங்கள் புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை பயன்படுத்துவதற்கு இந்த இரகசியம் என்ற வார்த்தையானது உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது.

3. **வெளிப்பாட்டின் வரையறை**

தேவனுடைய சிருஷ்டிகள் வேறு எந்த வழியிலும் அறிந்து கொள்ளமுடியாத தம்மை குறித்ததான உண்மைகளை அவர்களுடைய மனதிற்கு தேவனே வெளிப்படுத்தும் செயல்பாடுதான் வெளிப்பாடு ஆகும். இந்த வெளிப்பாடு ஒரே நேரத்தையோ அல்லது ஒரு நீண்ட நேரத்தையோ உள்ளடக்கியதாக இருக்கலாம். பரிசுத்த வேதாகமம் என்பது தேவன் ஒரேநேரத்தில் வெளிப்படுத்தப்பட்ட உண்மைகள் என்று சொல்லிவிட முடியாது.

4. **வெளிப்பாட்டின் வகைகள்:** வெளிப்பாடுகள் இரண்டு வகைப்படும்

   a. <u>பொதுவான வெளிப்பாடு:</u> இந்த பொதுவான வெளிப்பாடு மூன்று வகையிலே காணப்படுகிறது.

   - இயற்கை படைப்புகள் (சங்கீதம் 19:1; ஏசாயா 40; ரோமர் 1:18–21),
   - மனிதனுடைய மனசாட்சி (ரோமர் 1:19; 2:14,15) மற்றும்
   - தேவனுடைய தெய்வாதீன செயல்கள் (மத் 5:45; அப் 14:17; 17:25–27)

ஆகியவற்றின் மூலம் வெளிப்படுகிறது. இந்த பொதுவான வெளிப்பாடு உலகத்தில் பாவம் பிரவேசிப்பதற்கு முன்பாகவே அதாவது மனிதனுடைய வீழ்ச்சிக்கு முன்பாகவே இருக்கிறது. இது இந்த உலகத்தில் இருக்கிற எல்லா மனிதர்களுக்கும் உண்டு. மட்டுமல்ல இந்த பொதுவான வெளிப்பாடுகளை பார்க்கும்பொழுது இதற்கு பின்னால் உள்ள தேவனை அறிந்துகொள்ளக்கூடிய ஆர்வம் மனிதனுக்கு தூண்டப்படுகிறது. இந்த பொதுவான வெளிப்பாடு மூலம் தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதைத்தான் அறிந்துகொள்ளமுடியுமே தவிர அவர் யார் என்பதை மனிதன் அறிந்துகொள்ளமுடியாது. இந்தப் பொதுவான வெளிப்பாட்டை ஒரு மனிதன் புறக்கணிக்கும்போது இந்தப் பொதுவான வெளிப்பாடே அவனை நியாயம் தீர்க்கும்; அவர்கள் போக்கு சொல்லமுடியாது. (ரோமர் 1:20).

b. <u>சிறப்பான வெளிப்பாடு:</u> பொதுவான வெளிப்பாட்டின் மூலம் தேவன் ஒருவர் உண்டு என்பதை மனிதன் அறிந்து கொண்டாலும், அது அவனை இரட்சிப்புக்கு நேராக வழி நடத்துவது இல்லை. ஆகவே தேவன் விசேஷித்த விதத்திலே மனிதனுக்கு தன்னை வெளிப்படுத்த வேண்டும். காரணம்..!
   - மனிதன் இன்றைக்கு பாவத்தினால் குருடாக்கப்பட்ட நிலையில் காணப்படுகிறான் (2 கொரி 4:4; எபே 4:17–19).
   - பொதுவான வெளிப்பாட்டின் உண்மைகள் இன்றைக்கு தவறாக வியாக்கியானம் செய்யப்படுகிறது. இத்தனை அழகாக வியக்கத்தக்க விதமாக உலகத்தை தேவன் படைத்திருக்க, மனிதனோ இது ஒரு அணுவில் இருந்து வந்ததாகவும் தற்செயலாக படைக்கப்பட்டதாகவும் இயற்கையாகவே உருவாக்கப்பட்டதாகவும் குரங்கிலிருந்து மனிதன் வந்தான் என்றும் கூறுகிறான். ஆகவே ஒரு விசேஷித்த வெளிப்பாடு அவசியமாக இருக்கிறது.

**5. விசேஷித்த வெளிப்பாட்டின் வரையறை**

தேவன் தம்மையே குறிப்பிட்ட வகைகளில் குறிப்பிட்ட காலங்களில் குறிப்பிட்ட மனிதர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். இதுவே விசேஷித்த வெளிப்பாட்டின் வரையறை ஆகும்.

a. பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார் (எபி 1:1,2).
   - <u>குறிப்பிட்ட மனிதர்கள்</u> என்பது தீர்க்கதரிசிகள், இயேசு கிறிஸ்து மற்றும் அப்போஸ்தலர்கள் ஆகியோரை குறிக்கிறது.
   - <u>குறிப்பிட்ட காலங்கள்</u> என்பது ஏறக்குறைய 1500 வருடங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது.
   - <u>குறிப்பிட்ட வகைகள்</u> என்று பார்க்கும்பொழுது அற்புதங்கள், நேரடியான வார்த்தைகள், நேரடியான எழுத்துக்கள், சொப்பனங்கள், தரிசனங்கள், ஊரிம் தும்மிம், திரி இயக்கத்தின் தூதராக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் பழைய ஏற்பாட்டில் அவ்வப்போது தோன்றி வெளிப்படுத்தியிருக்கிறார். புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்து மாம்சமாக வந்தும் தன்னை வெளிப்படுத்தி இருக்கிறார்.

b. இயேசுவைப்பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது (வெளி 19:10)

- தேவனை ஒருவனும் ஒருக்காலுங் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார் (யோவான் 1:18)
- அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது. (யோவான் 1:14)
- இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து (எபி 1:3).

இந்த வசனங்களின் மூலமாக தேவன் யார் அவருடைய இரட்சிப்பின் திட்டம் என்ன என்பதை இயேசு கிறிஸ்துவின் மூலமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைக் காண்கிறோம்.

c. இன்றைக்கு நம்முடைய கரங்களில் இருக்கும் பரிசுத்த வேதாகமம் விசேஷித்த வெளிப்பாடாக இருக்கிறது. இந்த வேத வசனம் ஒரு மனிதனை இரட்சிக்கக் கூடியதாக இருக்கிறது.